கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அரக்கோணம் தொழிற்பேட்டை இன்னும் செயல்படத் தொடங்கவில்லை. தொழிற்பேட்டைக்கு உள்ளேயே வெட்டப்படவிருக்கும் கிணறுகளிலிருந்து இத்தொழிற்பேட்டைக்கு வேண்டிய தண்ணீர் வசதியைப்பெற உத்தேசிக்கப்படுகிறது.

அரசாங்க நந்தனர் உயர்நிலைப்பள்ளி, சிதம்பரம்

*570 கேள்வி.—திரு. சி. சிவசுப்பிரமணியன்: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிதம்பரத்தில் உள்ள அரசாங்க நந்தனர் உயர்நிலைப் பள்ளியை கல்லூரியாக மாற்ற அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

THE HON. SRI P. KAKKAN: Not at present.

Construction of Hostel (Paramakudi)

*571 Q.—SRI C. SRINIVASAN: Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to 9–30 உ.ப.
construct a Government Boys' Hostel for Harijans and Backward Community students at Paramakudi during 1964?

THE HON. SRI P. KAKKAN: Not at present.

புலவர் கா. கோவிந்தன்: இப்பொழுது உயர்நிலைப் பள்ளிகளை மிகப் பரவலான அளவிலே ஆங்காங்கு துவக்கி வருகிறோம். அதன் காரணமாக அந்தப் பள்ளிகளில் படிக்க வரும் மாணவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. ஆகவே, ஹரிஜன விடுதிகளை மேலும் பல இடங்களில் துவக்குவதற்கு அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. பூ. கக்கன்: இம்மாதிரி விடுதிகளை வருஷா வருஷம் ஜாஸ்தியாக்கிக் கொண்டே வருகிறோம். இந்த வருஷம்கூட ஹரிஜன மாணவ, மாணவிகளுக்கு 21 விடுதிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது 300-க்கும் அதிகமாக--330, 340 இருக்கும்--விடுதிகள் இருக்கின்றன.

MR. SPEAKER: I think the House has no objection to extend the question hour till the remaining questions are disposed of.

Delimitation of Blocks

*572 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal for the delimitation of Blocks?

THE HON. SRI S. M. A. MAJID: Yes.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: இந்த வட்டாரங்கள் எந்த அடிப்படையில் பிரிக்கப்படும் என்று அறியலாமா?